www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

V11T

விருதுநகர் மாவட்டம்

இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2024

வகுப்பு 11

நேரம் : 1.30 மணி **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள்: 50

**I. பலவுள் தெரிக:** **10×1=10**

1) பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று

அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை

2) கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க.

அ) விரியன் - 1. தண்டை

ஆ) திருமுருகு - 2. காலாழி

இ) நாங்கூழ்ப்புழு - 3. சிலம்பு

ஈ) குண்டலப்பூச்சி - 4. பாடகம்

i) 3 4 2 1 ii) 3 1 4 2 iii) 4 3 2 1 iv) 4 1 3 2

3) 'ழ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது. 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்படுவது

அ) கவிதை நூல், திருச்சாழல் ஆ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி

இ) நாளிதழ், நன்னகர் வெண்பா ஈ) கட்டுரை நூல், குற்றாலக்கோவை

4) ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல், தனிக்குறில் முன் ஒன்று உயிர்வரின் இரட்டும், உடல் மேல் உயிர் வந்து ஒன்றுதல் ஆகிய விதிகளின்படி புணர்ந்த சொல்

அ) மூதூர் ஆ) வெற்றிடம் இ) நல்லாடை ஈ) பைந்தளிர்

5) ஆக்கப்பெயர் விகுதிபெறாத சொல்லைத் தேர்க.

அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாள் ஈ) ஆசிரியர்

6) 'அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன்' யார் யாரிடம் கூறியது?

அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்

இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

7) **கூற்று** : எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து, புறம் சார்ந்த நூல்.

**காரணம்** : சேரமன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்.

அ) கூற்று சரி; காரணம் தவறு ஆ) இரண்டும் சரி

இ) இரண்டிற்கும் தொடர்பில்லை ஈ) கூற்று தவறு; காரணம் சரி

8) 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?

அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை

இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

9) Myth - என்பதன் கலைச்சொல்

அ) ஆவணப்படம் ஆ) தொன்மம் இ) கல்வெட்டு ஈ) பேரழிவு

10) 'சொல்லாக்கம்' - என்ற நூலின் ஆசிரியர்

அ) கு. மறைமலை ஆ) கே. பாலதண்டாயுதம்

இ) ஆனந்த குமார சுவாமி ஈ) பாலசுப்பிரமணியன்

**II. குறுவினா (எவையேனும் நான்கனுக்கு விடையளி):** **4×2=8**

11) இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?

12) 'நாழிக்குள் திணிக்கும் மருந்து போல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

13) **தொடர் அமைத்து எழுதுக:** அன்றொருநாள், நிழலிலிருந்து

14) உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?

15) செந்துறைப் பாடாண்பாட்டு - துறை விளக்கம் எழுதுக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net  www.Trb Tnpsc.Com



**III. மொழிப்பயிற்சி இலக்கணம்:** **4×2=8**

**(எவையேனும் நான்களுக்கு விடையளி)**

16) கலைச்சொல்லாக்கம் - பொருள் தருக.

17) தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும். **(வினாத் தொடராக்குக)**

18) **விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக:**

சேரன் - வில், சோழன் - ..........., .......... - மீன்

19) **அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிக:**

அ) வந்தால் மகிழ்ச்சி இது; உழைத்தால் கிடைக்கும் இது (மானம்) = .............

ஆ) வேட(ஷ)ம் போட்டவன் வேடதாரி; பட்டம் வாங்கினவன்? (தாரி) = .............

20) **மரபுச் சொற்களை தொடரில் அமைத்து எழுதுக:** அவசரக்குடுக்கை

21) எழுந்த - **பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**IV. சிறுவினா: (இரண்டு மட்டும்)** **2×4=8**

22) ஃபிரெஸ்கோ ஓவியங்கள் ; கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?

23) ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

24) சிங்கி பெற்ற பரிசுப்பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?

25) ''உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்'' - **இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**V. நெடுவினா (இரண்டிற்கு மட்டும் விடையளி):** **2×6=12**

26) அ) 'கல்லும் கதை சொல்லும்' என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) 'பாரதிதாசன் ஒரு புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

27) அ) சிம்பொனித் தமிழரும் ஆஸ்கார் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) சிந்தனைப் பட்டிமன்றத்தின் நிகழ்வுகளைச் சுவை குன்றாமல் தொகுத்து எழுதுக.

**VI. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:** **1×4=4**

28) ''சிற்றூரும்'' எனத் தொடங்கும் புரட்சிக்கவிப் பாடல்.

----------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com